## விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம்

### விடுதி நிருவாகிப் பதவிகளுக்காக ஆட்களை சேர்த்துக்கொள்ளல்

விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் விடுதி நிருவாகிப் பதவிகளில் காணப்படும் வெற்றிடங்களுக்காக இங்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்யும் இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. (வெற்றிட எண்ணிக்கை 02 ஆகும்)

1. **கல்வித் தகைமை மற்றும் ஏனைய தகைமைகள் :**

1.1 ***கல்வித் தகைமை :***

1.1.1 சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம் மொழி, கணிதம் மற்றும் மேலும் இரண்டு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் 6 பாடங்களில் கல்விப் பொதுத் தராதர (சா. த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

1.1.2 கல்விப் பொதுத் தராதர (உ. த.) பரீட்சையில் குறைந்தபட்சம் ஒரு பாடத்தில் (பொது சாதாரண பரீட்சை தவிர) சித்தியடைந்திருத்தல்.

1.2 ***தொழில் தகைமை.***- துறை சார்ந்ததாகப் பெற்றுள்ள தொழில் தகைமை விசேட தகைமையாகக் கொள்ளப்படும்.

1.3 ***அனுபவம்.***- அரச அல்லது அதனுடன் இணைந்த விடுதி/நிறுவனத்தில் உதவி விடுதி அத்தியட்சகர் / உதவி விடுதி நிருவாகி அல்லது அதற்குச் சமமான உயர் பதவி ஒன்றில் இரண்டு வருடங்களுக்குக் குறையாத அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

1.4 ***உடல் தகைமைகள்.***- சகல பரீட்சார்த்திகளும் நாட்டின் எந்தப் பாகத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவியில் கடமைகளை மேற்கொள்வதற்கும் போதியளவு உடல் உள தேகாரோக்கியம் கொண்டவராக இருக்க வேண்டும்.

1.5 ***ஏனைய தகைமைகள் :***

(i) இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும் ;

(ii) விண்ணப்பதாரி சிறந்த நன்னடத்தை கொண்டவராக இருத்தல் வேண்டும் ;

(iii) பதவிக்குச் சேர்த்துக்கொள்வதற்காகத் தேவையான சகல தகைமைகளையும் 2016.07.01 ஆந் திகதியன்று சகல முறைகளிலும் பூர்த்திசெய்திருக்க வேண்டும்.

2. **சம்பள அளவுத்திட்டம்.**- 2020.01.01 ஆந் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் பொது நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 03/ 2016 இற்கமைய ரூபா 27,140 - 10 x 300 - 11 x 350 - 10 x 495 - 10 x 660 - ரூபா 45,540

3. **பொதுவான நிபந்தனைகள் :**

3.1 ***வயதெல்லை.***- 2016.07.01 ஆந் திகதியன்று 18 வயதைவிடக் குறையாமலும் 30 வயதைவிட மேற்படாமலும் இருத்தல் வேண்டும் ;

3.2 ***ஆட்சேர்ப்பு முறை :***

3.2.1 இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை சகல முறைகளிலும் பூரணப்படுத்தியுள்ள விண்ணப்பதாரர்களில் பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல. 15/ 90 இல் உத்தரவிடப்பட்டுள் ஏனைய நிபந்தனைகளுக்குட்பட்டு உரியவாறு தாபிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைச் சபையினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மூலம் தகைமை கொண்டோர் தேர்ந்தெடுக்கப்படுவர்.

3.2.2 *சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள்.*- இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் கொண்டதும் ஓய்வூதியம் தொடர்பில் அரசினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கை அடிப்படையிலான தீர்மானங்களுக்குட்பட்டும் இருத்தல் வேண்டும்.

3.2.3 *சேவை நிபந்தனைகள்.*- தாபன விதிக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 10 - 12 வரையான பிரிவுகள் உரியதாகும்.

3.2.4 விண்ணப்பதாரர்களினால் இவ்வறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2016.11.22 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு, "பணிப்பாளர் நாயகம், விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம், இலக்கம் 9, பிலிப் குணவர்தன மாவத்தை, கொழும்பு 7" என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

3.2.5 விண்ணப்பதாரிகளால் விண்ணப்பப்படிவத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "விடுதி நிர்வாகி பதவி - 2016" எனக் குறிப்பிட

